**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 279/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சுமதி |
| Father Name | : | ஜெகநாதன் |
| Village | : | முத்தூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 48 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது மகன் ஆவார். எனது மகன் இன்ஜினியரிங் படித்துக்கொண்டிருந்தார். கடந்த 07.08.2024 ஆம் தேதியன்று காலேஜ் சென்றுவிட்டு வீட்டிற்கு மதியம் வந்துவிட்டார். அதன் பின்னர் மதியம் 03.00 மணியளவில் ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் தனது நண்பரை பார்க்க சென்றார். பின்னர் எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் சிலம்பரசன் என்பவர் எனக்கு போன் செய்து மாலை 4.30 மணியளவில் கொடுமுடி – முத்தூர் ரோட்டில் சின்னமுத்தூர் பிரிவு அருகே உள்ள பெட்ரோல் பங்க் அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த பயணிகளை வைத்து கொண்டு செல்லும் ஆட்டோ எந்த வித சைகைகளும் செய்யாமல் திரும்பும்போது விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது மகனுக்கு இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்திருப்பதாக கூறினார். பின்னர் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும்போது எனது மகன் மருத்துவமனைக்கு

அழைத்துச்சென்றிருப்பதாக சொன்னார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது எனது மகன் இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பின்னர் போலீசார் எனது மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருநதேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆட்டோவானது பெட்ரோல் பங்கில் இருந்து வெளியே வந்த ஆட்டோ என்றால் சரிதான். எனது மகனுக்கு விபத்து சமயம் வயது என்ன இருக்கும் என்றால் 18 வயது ஆகும். எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற புல்லட் மூன்றாம் நபருடைய வண்டி என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்திற்கு முறையான சைகை செய்து திரும்பியது என்றும் இருசக்கர வாகனத்தை ஓட்டிய எனது மகன் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து மெதுவாக திரும்பிய ஆட்டோவின் மீது மோதி ரோட்டில் இருந்த டிவைடரில் பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.10 18:13:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 279/2025 |
| Deposition of Witness | : | PW–2 |
| Name | : | ஜெகநாதன் |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | முத்தூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 49 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். விபத்தில் இறந்த மோகன் பிரசாத் எனது மகன் ஆவார். எனது மகன் இன்ஜினியரிங் படித்துக்கொண்டிருந்தார். கடந்த 07.08.2024 ஆம் தேதியன்று நான் சென்னையில் இருந்து வந்து கொண்டிருக்கும்போது எனது மனைவி எனக்கு போன் செய்து காலேஜ் சென்றுவிட்டு வீட்டிற்கு மதியம் வந்துவிட்ட பின்னர் மதியம் 03.00 மணியளவில் ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் தனது நண்பரை பார்க்க சென்றதாகவும், பின்னர் மாலை 4.30 மணியளவில் கொடுமுடி – முத்தூர் ரோட்டில் சின்னமுத்தூர் பிரிவு அருகே உள்ள பெட்ரோல் பங்க் அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த பயணிகளை வைத்து கொண்டு செல்லும் ஆட்டோ எந்த வித சைககளும் செய்யாமல் திரும்பும்போது அதில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது மகனுக்கு இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் கூறினார். நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது எனது மகன் இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் போலீசார் எனது மகனின்

பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆட்டோவானது பெட்ரோல் பங்கில் இருந்து வெளியே வந்த ஆட்டோ என்றால் சரிதான். எனது மகனுக்கு விபத்து சமயம் வயது என்ன இருக்கும் என்றால் 18 வயது ஆகும். எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற புல்லட் மூன்றாம் நபருடைய வண்டி என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் ஆட்டோவில் மோதி எதிரில் இருந்த டிவைடர் கல்லில் மோதியதை நான் அங்கிருந்த பங்க் கேமரா பதிவில் பார்த்தேன். எதிரி ஓட்டி வந்த வாகனம் முறையான சைகை செய்து திரும்பியது என்றும் இருசக்கர வாகனத்தை ஓட்டிய எனது மகன் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து மெதுவாக திரும்பிய ஆட்டோவின் மீது மோதி ரோட்டில் இருந்த டிவைடரில் பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.10 18:13:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்